ஆகவே, அரசே முன்வந்து கிராமப்புறங்களில் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளிகளில் எல்லா சப்ஜெக்ட்டுகளும் கம்பல் சரியாக வைக்கவேண்டும் என்ற உத்தரவைக் கொடுத்தால் ஒழிய அந்த சப்ஜெக்ட்டுகள் வராது. ஆகவே, அரசு இதை முனைப்புடன் செயற்படுத்தி இந்தத் திட்டத்தைக் கொண்டு வர முனையுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயிற்று வலிக்கு மருந்து கொடுக்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆக, எனக்கு வயிற்று வலி என்று ஒருவர் வந்தால் தான் நாங்கள் மருந்து கொடுக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் கிராமப்புறங்களில் இருக்கின்ற குழந்தைகள் நகரத்திற்குச் சென்று கல்லூரியில் படிக்க வேண்டும். கிராமங்களுக்கு அந்தக் கல்லூரிகளை எல்லாம் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தந்து இருக்கிறீர்கள். அந்த கிராமங்களில் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளிகளில் வணிகவியல் பாடத்தையும் சேர்த்துத் தருவதற்கு மத்திய அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஏதாவது நிதி உதவி வழங்குகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகவியலுக்கு என்று மத்திய அரசு எந்த நிதி உதவியும் செய்வது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 144, டாக்டர் எம்.பி. சேகர், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

144—

பெரம்பூர் டாக்டர் அம்பேத்கார் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு துவங்குதல்.

* 10591—டாக்டர் எம். பி. சேகர் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரம்பூர் தொகுதியில் உள்ள டாக்டர் அம்பேத்கார் கல்லூரியில் பட்ட மேற்படிப்புகள் (பி.ஜி. கோர்ஸ்) துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் துவங்கப்படும் ?

1993 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எம். பி. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் பாபா சாகிப் பாரத ரத்னா மறைந்த டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் அவர்களுடைய நினைவால் நடக்கும் அரசுக் கல்லூரியிலே பட்ட மேற்படிப்பு அளிக்கும் செயற் குறிப்புகள் அரசிடம் உள்ளதா என்று நான் கேட்டேன். அதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறிவிட்டார்கள். இல்லை, முடியாது என்ற சொற்களே தன் அகராதியில் இல்லை என்று நீக்கி விட்ட நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால புனித ஆட்சியிலே அடுத்த ஆண்டாவது அதை நிறைவேற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். மற்றபடி அங்கே...... ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு துணைக் கேள்வி தான். இன்னொரு துணைக் கேள்வியைப் பிறகு கேளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வகுப்புகள் துவங்க வேண்டும் என்ற கோரிக்கை கல்லூரி முதல்வர் அவர்களிடமிருந்து வரவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

டாக்டர் எம். பி. சேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பி.ஏ. இஸ்டரி, எக்கனாமிக்ஸ், பி.காம்., கோர்ஸ்கள் அங்கே இல்லை. அந்தத் துறைகளாவது ஆரம்பிக்கப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வியாசர்பாடியிலுள்ள டாக்டர் அம்பேத்கர் கலைக் கல்லூரியானது இப்போது தான் ஓரளவுக்கு ஒழுங்காக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, இன்னொரு பாடப் பிரிவு தேவை என்று கேட்கக் கூடிய ஒரு நிலைமைக்கு அது வந்திருப்பது குறித்து அரசு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது. ஆகவே, எதிர்காலத்திலே அவர்கள் பாடப் பிரிவுகளைக் கேட்கின்றபொழுது அது குறித்து அரசு பரிசீலிக்கும்.